DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.25

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மாரிச்சாமி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 1st day of July, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது செங்குன்றாபுரத்தில் குடியிருந்து பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்துவருகிறேன். கடந்த 09.11.2021ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் குமிலங்குளம் கம்மாய் பாதை வழியாக வந்து கொண்டிருந்தேன். அங்கு போலிஸ் அதிகாரிகள் நின்று கொண்டிருந்தார்கள். உடன் ஒருவர் கருப்பாக குள்ளமாக நின்றுகொண்டிருந்தார். என்னை போலிசார் எந்த ஊர் என்று அழைத்து விசாரித்தார்கள். நான் செங்குன்றாபுரம் என்று சொன்னேன். அப்போது போலிசார் எங்கள் ஊரைச்சேர்ந்த செல்வகணேஷ் என்பவரை அவருடன் உடன் இருந்த நபர் கொலை செய்துவிட்டு செல்போனை தண்ணீருக்குள் போட்டுவிட்டதாக சொன்னார்கள். பின்னர் எரிச்சநத்தத்தை சேர்ந்த கேத்தையா என்பவரும் நானும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கம்மாயிற்குள் இறங்கி செல்போனை தேடி பார்த்தோம். தண்ணீர் அதிகமாக இருந்ததால் கண்டுபிடிக்கமுடியவில்லை. அன்றைய தினம் போலிசாருடன் இருந்த நபர் ஆஜர் எதிரிதான். இது சம்பந்தமாக போலிசார் என்னை

விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

இறந்த நபர் எனது ஊரைச்சேர்ந்தவர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் குமிலங்குளம் கம்மாய் பகுதிக்கே செல்லவில்லை என்றாலும், செல்போனை நான் சொன்னது போல் தேடவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது போலிசார் என்னிடம் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் தற்போது எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.